6th March 1968]

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTHY : Sir, I would like just to pass on some information to Government. The price for paddy paid in Kerala is 65 rupees per quintal and even that is considered inadequate, having regard to the cost of production in that State. It is not as mentioned by the Hon. Minister.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் ஒன்றும் அதை விமர்சனம் செய்யவில்லை. அதை முற்போக்கான கொள்கை என்று சொல்லவில்லை. கேரள நிலைமை வேறு, நமக்குள்ள நிலைமை வேறு, ஐந்து எக்கருக்கு மேலுள்ள நிலப் பிரபுக்களுக்குக் கொடுப்பது, என்ற அங்குள்ள நிலைமையைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் விமரிசனம் செய்வது. அங்கே வசூலாவது நம்மிடம் உள்ளதைப் போல அல்ல. நமக்கு வசூலாவதில் பாதிகூட அங்கே வசூலாவதில்லை.

THIRU A. R. DAMODARAN : The Hon. Minister has mentioned that only 20 per cent is collected by procurement. Would it be possible for the Government to give the mirasdars the surplus whenever twenty per cent is procured ? Actually there is no such thing as twenty per cent.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நம்முடைய மாநிலம் கூட்டாக இருந்தபோது 20 சத விகிதம் இருந்தது. நஞ்சையில் 55 சத விகிதத்திற்கு வந்து விடுகிறது. நாம் ஒரு லெவி முறை வைத்திருக்கிறோம். ஒரு எக்கருக்குக் குறைந்தவர்கள் கொள்முதலுக்குக் கொடுக்கவேண்டியதில்லை. பதிமூன்று லட்சம் விவசாயிகள் இதனால் பயன் பெறுகிறார்கள். ஒரு எக்கரில் இருந்து 10 எக்கர் வரையில் ஸ்லேப் (Slab) முறை வைத்திருக்கிறோம். பத்து எக்கர் உள்ளவர்கள் 40 மூட்டை கொடுக்க வேண்டுமென்றும் ஐந்து முதல் ஏழு எக்கர் உள்ளவர்கள் கொடுக்க வேண்டியது என்பதற்கு ஒரு ஸ்லாப்பும் இருக்கிறது. நான் இங்கே கூறுவது பொதுவாக உள்ள ஒட்டுமொத்தமான கணக்கு. ஏற்கனவே எவ்வளவு கொள்முதல் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மேலான அளவில் கொள்முதல் செய்யப்படுவதில்லை.

Coimbatore Medical College

*190. *Q.*—THIRU N.R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state— 3-40 p.m.

(*a*) the estimated expenditure for the construction of buildings for the Coimbatore Medical College ; and

(*b*) the place where the building will be constructed ?

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிக்கு எத்தனை லட்சம் ரூபாயில் கட்டிடம் கட்டத் திட்டம் உள்ளது ?

(இ) எந்த இடத்தில் கட்டிடம் கட்டப்படும் ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) கோவை மருத்துவக் கல்லூரிக்கு இதுவரை ரூ. 30.94 லட்சம் பெறுமானமுள்ள கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசினரால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. அக்கல்லூரிக்கு மேலும் தேவைப்படும் கட்டிடங்களின் அவசியம் குறித்து அரசு ஆலோசித்து வருகின்றது.

[6th March 1968

(இ) அக்கல்லூரிக்கான கட்டிடங்கள் பீலமேட்டில் விளாங்குரிச்சி கிராம எல்லையில் அமைக்கப்பட்டு வருகின்றன.

திரு. எம். எத்திராஜுலு : தலைவரவர்களே, மாவட்டத்திற்கு மாவட்டம் மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்ற கொள்கை அரசாங்கத்திற்கு ஏதாவது இருக்கிறதா ? அப்படியானால் எந்தெந்த மாவட்டங்களில் இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டு ஏற்படுத்தப்படும் ?

MR. CHAIRMAN : இது கோயம்புத்தூர் கல்லூரியைப் பற்றிய கேள்வி. அது பற்றி வேறு கேள்விதான் போட வேண்டும்.

திரு. கே. எஸ். அப்துல் வஹாப் : கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க மொத்த (allotment) தொகை எவ்வளவு ? இதில் மத்திய அரசு கொடுத்த தொகை எவ்வளவு ? மாநில அரசு கொடுத்த தொகை எவ்வளவு ? நன்கொடை மூலம் வசூலித்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : நன்கொடை மூலம் ரூ. 25 லட்சம் வசூலித்துத் தருவதாகச் சொன்னார்கள். ஆனால் ரூ. 5 லட்சம்தான் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் முயற்சியால் கட்டிடம் கட்டுவதற்கு இடம் தருவதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். மொத்தம் ரூ. 175 லட்சம் என்று திட்டம் போடப்பட்டிருக்கிறது. எல்லாவற்றையும் சேர்த்து, (advance equipment) முதலியவைகளைச் சேர்த்து ரூ. $2\frac{1}{2}$ கோடியாகும்.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note*—An An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENTS

(1) DECISION OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

MR. CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held at 2-00 p.m. to-day, the following further programme of business has been decided :—

25th March	Presentation of the Final Supplementary Statement of Expenditure for 1967–68.
26th March	Discussion on the Final Supplementary Statement of Expenditure.
27th March	Non-Official day.
28th March	No meeting.
29th March	Holiday
30th March	Consideration of Appropriation Bills.
1st April	(1) Consideration of official Bills and Government Resolution. (2) Valedictory speeches.

The Council will sit from 3 to 6 p.m. daily and adjourn on 1st April.